**சுருக்கம்**

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நல்ல குடிநீர் வழங்குவது – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு முன்பணம் மற்றும் வருடாந்திர கட்டணம் – நிதி ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எச்1) துறை**

அரசாணை (நிலை) எண். 349

நாள்: 29.10.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய – ஐப்பசி –12

படிக்கவும்:–

மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களின் ந.கோ.எண்.67262/திவ/1/2013, நாள் 17.10.2013, 09.04.2014, 05.06.2014 மற்றும் 06.06.2014.

--------

**ஆணை:**

மருத்துவக் கல்வி இயக்குநர் பார்வையில் காணும் தனது கடிதத்தில், சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, இராமநாதபுரம் காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தில் இருந்து சிவகங்கை நகராட்சி மூலமாக நல்ல குடிநீர் நோயாளிகளுக்கு வழங்க, ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.30 வீதம் செலவாகும் என்றும், 1.50 இலட்சம் லிட்டர் குடிநீரினை சிவகங்கை நகராட்சியில் உள்ள சேமிப்பு கிணற்றிலிருந்து பெற இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்ட வாரிய விதிமுறைகளின்படி குடிநீர் கட்டணம் மற்றும் முன்வைப்பு தொகையினை செலுத்தும்படி நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், (இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம்,) சிவகங்கை அவர்கள் தெரிவித்துள்ளதாகவும், காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் இணைப்பு பெற செலுத்த வேண்டிய தொகை தொடர்பாக குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பெறப்பட்ட தேவைப்பட்டியலில் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் குடிநீரை ஒரு கிலோ லிட்டர் ரூ.30.00 என்ற விலையில் பெறுவதற்கு திரும்ப பெற இயலாத முதலீட்டு கட்டணமாக ரூ.8.22 இலட்சமும் (தொடரா செலவினம்) மற்றும் ஆறு மாதங்களுக்குண்டான முன்பணமாக ரூ.8.22 இலட்சமும் (தொடரா செலவினம்) ஆக மொத்தம் ரூ.16.44 இலட்சம் மற்றும் வருடாந்தர கட்டணமாக ரூ.16.44 இலட்சம் (ரூபாய் பதினாறு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரம் மட்டும்) (தொடரும் செலவினம்) தேவைப்படுவதால், மேற்கண்ட மொத்த தொகை ரூ.32.88 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் கோரியுள்ளார் என்றும் அதற்கான நிதியை நடப்பு ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் வழங்குமாறும் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டத்தின்கீழ், சிவகங்கை நகராட்சி மூலம் நோயாளிகளுக்கு நல்ல குடிநீர் வழங்கும் பொருட்டு, ரூ.16,44,000/– (ரூபாய் பதினாறு இலசத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்) (தொடரா செலவினம்) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு முன்பணமாக செலுத்தவும், வருடாந்திர கட்டணமாக ரூ.16,44,000/– (ரூபாய் பதினாறு இலசத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்) (தொடரும் செலவினம்) ஆக மொத்தம் ரூ.32,88,000/– (ரூபாய் முப்பத்திரெண்டு லட்சத்து எண்பத்தெட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

''2210–மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01 நகர்ப்பகுதி சுகாதாரப் பணிகள் – ஆங்கில முறை மருத்துவம் – 110– மருத்துவமனைகளும் மருந்தகங்களும் I திட்டத்தில் சேராதது – DY – அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிவகங்கை 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 03 தண்ணீர் கட்டடங்கள்''.
(த.தொ.கு .2210–01–110–DY-0632)

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புது துணைப் பணித் திட்டம் குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும் மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும் முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு–செலவு–I) துறைக்கு அனுப்பி வைக்கமாறு மருத்துவ கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2014–2015 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (சுகாதாரம் – II) துறைக்கு அனுப்பி வைக்குமாறு அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதி துறையின் அ.சா.கு.எண். 57206/சுகாதாரம்–II/2014, நாள் 27.10.2014–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.1423 (ஆயிரத்து நானூற்று இருபத்து மூன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10
நிதி ஆலோசகர், மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை–10
முதல்வர், சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சிவகங்கை.
மாநில கணக்காயர், சென்னை– 18.
சம்பள மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
<u>நகல்</u>
பொதுப்பணித்துறை, சென்னை–9.
நிதி (சுகாதாரம் II/ வரவு–செலவு–I) துறை, சென்னை–9
மாவட்ட கருவூல அலுவலர், சிவகங்கை.
நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (இராமநாதபுரம் கூட்டு குடிநீர் திட்டம்), சிவகங்கை.
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (விவர வகைப்பாட்டு பிரிவு /ஜே) துறை, சென்னை–9.
உதிரி கோப்பு / இருப்பு கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்